# THE FXEC TIMES
Empowering your Future

தமிழ்

www.francisxavier.ac.in
facebook.com/fxengg/
instagram.com/fx_ec/

இதழ் - 1

மே 2022


ARIIA
ATAL RANKING OF INSTITUTIONS ON INNOVATION ACHIEVEMENTS
Out of 14,505 Technical Institutions, FXEC has been ranked one among 96 top Institutions in India.

Four Star Status by the Ministry of Education, Govt. of India.
For Innovation and Entrepreneurship Activities

PLATINUM RATING
FXEC has been awarded with PLATINUM RATING FOR THE YEAR 2020 by AICTE-CII Survey of Technical Institutes, 2020 among 814 Institutes in India

NBA NATIONAL BOARD of ACCREDITATION

AICTE

# எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி சாதனை:

## 81 மாணவர்களுக்கு TCS நிறுவனத்தில் பணி நியமன ஆணை!

TCS நிறுவனம் இந்த ஆண்டு நடத்திய தேசிய அளவிலான வேலைவாய்ப்புக்கான தேர்வில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு மாணவகள் தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்புக்கான பணி நியமன ஆணைகளை பெற்றார்கள். ஸ்காட் கல்விக் குழுமங்களின் நிறுவனர் முனைவர் திரு. S.கிளிட்டஸ் பாபு 81 மாணவர்களுக்கும் TCS நிறுவனத்தின் பணி நியமன ஆணைகளை அவர்களது பெற்றோர்கள் முன்னிலையில் வழங்கினார்கள். TCS நிறுவனத்தின் தேசிய அளவிலான தேர்வில் வெற்றி பெறுவதற்கான பயிற்சிகளைப் பன்னாட்டு நிறுவனங்களின் வல்லுநர்களைக் கொண்டு மாணவர்களுக்கு வழங்கி, பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி நிர்வாகம் கிராமப்புற மற்றும் நகர்புறத்தைச் சார்ந்த 81 மாணவர்களுக்கு TCS நிறுவனத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தந்து வளமான எதிர்காலத்தை ஏற்படுத்தியுள்ளது.



ஸ்காட் குழும நிறுவனர் முனைவர் கிளிட்டஸ் பாபு TCS பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

TCS நிறுவனத்தின் மூலம் கல்லூரியில் இருந்தே பயிற்சி பெற்று வருகிறார்கள். தகுதித் தேர்வில் வெற்றி பெற்று வேலை வாய்ப்பைப் பெற்றுள்ள இறுதி ஆண்டு மாணவர்கள் அவர்களின் தனித் திறமைக்கேற்ப டிசிஎஸ் நிறுவனத்தின் பிரிவுகளான IOT, AWS, ITIS, சேல்ஸ் போர்ஸ் ஆகிய துறைகளில் சிறப்புப் பயிற்சிகளை பெறுகின்றனர்.

மேலும் கல்லூரி வளாகத்தில் இயங்கி வரும் தொழில் நிறுவனங்களும் தேவையான பயிற்சி அளித்து மாணவர்களை சிறப்பாக உருவாக்கி வருகிறார்கள். Texas Instruments (TI), National Instruments (NI), CISCO, IBM, FANUC போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் ஆய்வகங்களும் உள்ளன.

அந்த ஆய்வகங்களில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. சுயதொழில் களை ஊக்குவிக்கும் MSME நிறுவனத்தின் பிரிவும் அரசு நிதி உதவியுடன் கல்லூரியில் செயல்படுகிறது. தேசிய அளவிலான TCS நிறுவன தேர்வில் கிராமப்புற, நகர்ப்புற மாணவர்களுக்கும், பயிற்சி அளித்து .

வெற்றி பெறவைத்து எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரி புரட்சிகரமான சாதனையை நிகழ்த்தியுள்ளது.

இந்த அரிய திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் கல்லூரியின் பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், பொது மேலாளர் திரு. S.கிருஷ்ணகுமார், முதல்வர் முனைவர் V.வேல் முருகன், வேலைவாய்ப்புத் துறை டீன் முனைவர் A.ஞான சரவணன், பயிற்சித்துறை டீன் முனைவர் S.பாலாஜி, தொழில் முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபாலராயன், கல்விசார் துறைப் பேராசிரியர் முனைவர் L.R.பிரியா, வளாக மேலாளர் J.சகாரியா கேபிரியல், தொலை தொடர்புத்துறைப் பேராசிரியர் முனைவர் M.கரோலின் வயோலா ஸ்டெல்லாமேரி, பேராசிரியர் J.டேவிட் எலிங், பேராசிரியர் முனைவர் J.ஜாஸ்பெர் ஞான சந்திரன் உள்ளிட்டோரை கல்லூரி நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண் பாபு ஆகியோர் பாராட்டினர்.


ஸ்காட் குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, கல்லூரி பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன், பேராசிரியர்கள் மற்றும் TCS நிறுவனத்தில் ஆணை பெற்ற மாணவர்கள் உள்ளனர்.

## கல்லூரி நிர்வாகத்திற்கு மாணவர்கள் நன்றியுரை!







## எப்.எக்ஸ். மாணவர்களுக்கு 100 சதவிகிதம் வேலைவாய்ப்பு!

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள் 24 மணி நேரமும் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் எதிர்கால வாழ்க்கைக்காகவும், அவர்களது நன்மைக்காகவும் அர்ப்பணிப்பு உணர்வுடன் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு 100 சதவிகிதம் வேலைவாய்ப்பு உறுதி என்றும் கல்லூரி நிறுவனர் முனைவர் கிளிட்டஸ்பாபு பெருமிதமாக கூறினார்.

எப்.எக்ஸ். கல்லூரியில் நடந்த விழாவில் டிசிஎஸ் நிறுவனத்தில் பணி நியமன ஆணைகளை கல்லூரி நிறுவனர் முனைவர் கிளிட்டஸ்பாபு மாணவர்களுக்கு வழங்கியதோடு, அவர்களது பெற்றோர்களையும் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார்.

இந்த விழாவில் பேசிய அவர், "நமது கல்லூரி பேராசிரியர்கள் நன்றாக உழைப்பதனால்தான் நமது மாணவர்கள் ரூ.6 லட்சம் முதல் ரூ.16 லட்சம் வரை சம்பளம் பெறுகிறார்கள். தற்போது ரூ.1 கோடி ஆண்டு வருமானத்திற்கான பயிற்சிகளை மாணவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இது போன்று மாணவர்களின் உயர்வுக்கு பாடுபட்டு வரும் பேராசிரியர்கள் அனைவரையும் பாராட்ட வேண்டும்.

அடுத்தபடியாக பெற்றோர்கள், இந்த குழந்தை பிறந்தவுடன் பொறியாளர் ஆகி நல்ல சம்பளத்துடன் வேளையில் அமர வேண்டும் என்று கனவு கண்டிருப்பீர்கள். அந்த கனவு உங்களின் ஒத்துழைப்புடன் இன்று நினைவாகியிருக்கிறது. பல மாணவர்களும் விடுமுறை நாள்களில் கூட தொழில் நிறுவனங்களில் அளிக்கக்கூடிய பயிற்சியை கல்லூரியிலேயே அளிக்கிறோம்.


நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு

இறுதி ஆண்டு படிக்கும் போதே பன்னாட்டு நிறுவனங்களின் மாணவர்கள் 274 பேர் மாத ஊதியத்துடன் வேலை பார்க்கின்றனர். படித்துக்கொண்டே வேலை பார்க்கும் மாணவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அவ்வாறு மாணவர்கள் ஒத்துழைத்த காரணத்தால் தான் இந்த டிசிஎஸ் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு ஆணைபெற முடிந்தது. மாணவர்கள் விடா முயற்சியுடன் மென்மேலும் அதிக சம்பளம் பெறுவதற்க்கான வேலைவாய்ப்பு தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற வேண்டும் அகில இந்திய தொழில் நுட்ப கவுன்சில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியை அதிக ரேங்க் பட்டியலில் தேர்வு செய்து இருக்கிறார்கள். தொழில்நுட்ப கவுன்சில் 4 ஸ்டார் விருதை கல்லூரிக்கு வழங்கியுள்ளது.

எனவே, 'படிக்கும்போதே வேலை' என்ற லட்சியத்தோடு மாணவர்களை ஊக்குவிக்கிறோம்.

முதல் ஆண்டு படிக்கும் போதே மாணவர்கள் சம்பளம் வாங்குகின்றனர். அவர்கள் இறுதி ஆண்டு பயிலும் போது கூடுதல் சம்பளம் கிடைக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.









# தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு புத்தாக்க போட்டியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் மாணவி அஸ்வதி மோகன் ரூ. 1 லட்சம் வென்றார்!

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் நடந்த போட்டியில் ரூ.1 லட்சம் பரிசு வென்று சாதனை படைத்த நெல்லை வண்ணார்ப்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவி அஸ்வதி மோகனை கல்லூரி நிறுவனர் முனைவர் திரு கிளிட்டஸ் பாபு பாராட்டினார்.

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் ஆண்டு தோறும் மாணவ, மாண வியர் மற்றும் தொழில் முனை வோர்களையும் ஊக்குவிக்கும் வகையில், கல்லூரியில் பயிலும் மாணவ கண்டுபிடிப்பாளர்களுக் கான போட்டிகளை நடத்தி வரு கிறது. தமிழக அரசால் 2016-ல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர்களுக்கான திறமையை நிரூபிக்கும் புத்தாக்க போட்டிகள் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் நடை பெற்றன.

இந்தப் போட்டிகள் மண்டல வாரியாக நடத்தப்பட்டு வரு கிறது. இதில் விவசாயத் தொழில். ஸ்மார்ட் சிட்டி, ஹெல்த் கேர், ஃபின்-டெக் மற்றும் ஆட்டோ மொபைல் ஆகிய துறை மாண வர்களின் தங்களது கண்டு பிடிப்புகள், அதில் ஏற்படும் பல்வேறு சிக்கலான பிரச்ச னைகளுக்குத் தீர்வு காண்பது குறித்தும், அதில் உருவாகும் இடர்பாடுகளை களைவது குறித்தும், மாணவர், மாணவியர் குழுக்கள் தங்களது புதுமையான யோசனைகளை வழங்கவும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு அண்ணா பல்கலைக்கழகம் நாகர்கோவில், ஸ்காட் பொறியியல் கல்லூரி, சேரன்மாதேவி, அண்ணா பல கலைக்கழகம், கிண்டி, சென்னை ஆகிய இடங்களில் 3 சுற்றுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. திரு நெல்வேலி மண்டலம் சார்பில் மாணவர்களுக்கான இறுதிச் சுற்று போட்டிகள் நடைபெற்றன போட்டியில் பல்வேறு கல்லூரி மாணவ, மாணவியரும் கலந்து கொண்டனர்.




ஸ்காட் குழும நிறுவனர் முனைவர் திரு. கிளிட்டஸ் பாபு அவர்கள் ரூ.1 லட்சம் பரிசு பெற்ற மாணவி அஸ்வதி மோகனை பாராட்டினார்.

இதில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி சார்பில் M.E. இரண்டாம் ஆண்டு கம்ப்யூட்டர் சயின்ஸ் பயிலும் மாணவி அஸ்வதி மோகன் கலந்து கொண்டார். அவர் சைபர் பாதுகாப்பு என்ற தலைப்பில் சைபர் குற்றங்களை தடுப்பது குறித்தும், இணை யதள நெட்வொர்க்கில் ஏற்படும் இடர்பாடுகளை களைவது, பாதுகாப்பது மற்றும் சிக்கலான பிரச்சனைகளுக்கு தீர்வு காண் பது போன்ற அம்சங்களை கண்டுபிடித்து புத்தாக்க போட்டி யில் வெற்றி பெற்றுள்ளார். இந்த சாதனை படைத்த மாணவி அஸ்வதி மோகனுக்கு ரூ.1 லட்சம் பரிசு வழங்கப்பட்டது.

இதற்கு பெருமுயற்சி மேற் கொண்ட கல்லூரி பொதுமேலா ளர்கள் முனைவர் K.ஜெயகுமார், திரு. s.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன், மற்றும் தொழில் முனைவோர் பயிற்சித்துறை இயக்குநர் முனைவர் ஹூர்டஸ் பூபாலராயன் உள்ளிட்டோரை ஸ்காட் குழும கல்லூரி நிறுவனர் முனைவர் திரு. கிளிட்டஸ் பாபு அவர்கள், நிர்வாக இயக்குநர் அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்

# NSS சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## மாவட்ட ஆட்சியர் விஷ்ணு தொடங்கி வைத்தார்!




கல்லூரி நிறுவனர் முனைவர் திரு கிளிட்டஸ் பாபு அவர்கள் மாவட்ட கலெக்டர் விஷ்ணுவுக்கு நினைவு பரிசை வழங்கினார்.

பிளாஸ்டிக் பைகளால் ஏற்ப டும் தீமைகள், அச்சுறுத் தல்கள் குறித்து மாணவர்களும், பொதுமக்களும் விழிப்புடன் இருக்க வேண்டிய தருணம் இது என்பதை உணர்த்தும் வகையில், பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி யின் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் மெகா விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் விஷ்ணு தொடங்கி வைத்தார்.

.இந்நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர். விஷ்ணு, IAS துவக்கி வைத்து சிறப்புரை யாற்றினார்

அவர் தனது உரையில், பிளாஸ்டிக்கினால் சுற்றுச்சூழல் மாசுபடுதலின் அளவு உயர்ந் திருப்பதால் வரும் ஆபத்துக்கள் பற்றியும் கூறினார். இதன் மாற்றாக இயற்கை பொருட் களினால் செய்யப்பட்டவை களை பயன்படுத்துவதன் மூலம் பிளாஸ்டிக் பயன்பாட்டை எவ் வாறு குறைக்கலாம் என்றும் கூறினார்.

மேலும், வணிக நிர்வாகத் தின் முதுகலை மாணவர்க ளையும், பொறியியல் மாண வர்களையும் புதிய தொழில் நுட்ப அடிப்படையிலான வணிக மாதிரிகளைக் கண்டறிய அவர் ஊக்குவித்தார்

. பொறியியல் படிக்கும் மாண வர்கள் பிளாஸ்டிக்கைக் குறைப் பதில் சபதம் எடுப்பதோடு, மட்டுமல்லாமல் மாற்று வழி களையும் நன்கு கண்டறிந்து சமூகத்திற்காக தங்களால் இயன்றதைச் செய்து, அவர் களின் புதுமையான யோசனை களை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும் அவர் கூறினார்.


கல்லூரி நிறுவனர் முனைவர் திரு. கிளிட்டஸ் பாபு அவர்கள் தனது தலைமை உரையில், மாவட்ட ஆட்சியரால் தொடங்கப் பட்ட தொழில்நுட்ப அடிப்ப டைப்படையிலான திட்டங்களை எடுத்துரைத்தார். பிளாஸ்டிக் பயன்பாட்டை பெருமளவில் தடுக்க புதிய வழிகளைக் கண்டறிய வேண்டியதன் அவசி யத்தையும் அவர் மேலும் தெரிவித்தார்.

பின்னர், பொதுமேலாளர் முனைவர் கே.ஜெயக்குமார், (வளர்ச்சி) மாணவர்களிடையே பேசுகையில், புதுமையான யோசனைகளை நன்றாக வெளிப்படுத்தும் திறனை நம் மாணவர்கள் கொண்டுள்ளனர், தங்கள் திறனை பயன்படுத்தி மேலும், பிளாஸ்டிக்கிற்கு பதிலாக சமூகத்துக்கு ஏதேனும் புதிய மாற்றுகளைக் கண்டறிந்து பூமியைக் காப்பாற்ற வேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்தினார். பொது மேலாளர் கிருஷ்ணகுமார் (நிர்வாகம்) பேசுகையில், இந்த முயற்சியானது வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்று வதற்காண முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும் என்று பேசினார்.

மின் மற்றும் மின்னணுவியல் துறை மாணவி நித்தியாஸ்ரீ நன்றியுரையாற்றினார்.

இந்த மாபெரும் முயற்சியை நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்த நாட்டு நலப்பணி திட்ட தன்னார் வலர்களுக்கு முதல்வர் முனைவர் வி.வேல்முருகன் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியை வளாக மேலா ளர் சகரியா கேபிரியல் மற்றும் என்.எஸ்.எஸ் திட்ட அலுவலர் முனைவர் சுமன் ஆகியோர் செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சி யினை தொடர்ந்து அனைத்து மாணவர்களுக்கும் தேசிய சேவை திட்ட தன்னார்வலர்கள் வழங்கினர்.







# பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி - போத்தீஸ் இணைந்து மாநில அளவிலான கலைப் போட்டிகள்!

திருநெல்வேலி பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மற்றும் போத்தீஸ் இணைந்து மாநில அளவிலான கல்லூரி களுக்கு இடையேயான மாணவ மாணவியரின் கலைத் திறமைகளை வெளிப் படுத்தும் போட்டிகள் நடைபெற்றன.

விழாவின் சிறப்பு விருந்தினராக திரைப்பட பின்னணி பாடகர் மற்றும் நெல்லை ஆந்தம் புகழ் இசையமைப்பாளர் திரு அல் ரூபைன் அவர்கள் கலந்துகொண்டு விழாவினை துவக்கி வைத்தார் ஸ்காட் கல்வி குழுமங்களின் பள்ளிகளின் தாளாளர் திருமதி பிரியதர்ஷினி அருண்பாபு அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். மேலும் போத்தீஸ் நிறுவனத்தின் மேலாளர் திரு இஸ்மாயில் கலந்து கொண்டார்.

இவ்விழாவில் மாணவர்களின் கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக நடன போட்டி, பாட்டுப் போட்டி, ரங்கோலி போட்டி, கழிவுப் பொருட்களில் இருந்து கலைப் பொருட்களை உருவாக்கும் போட்டி, இசைக்கருவி மீட்டல் போட்டி, மின்சாரம் எரிபொருள் இன்றி உணவு பொருட்கள் தயாரிக்கும் போட்டி, புகைப்படம் போட்டி என பல்வேறுவிதமான போட்டிகள் மூலம் கலைப் போட்டிகள் நடை பெற்றன.

இந்த விழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் சார்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

போட்டிகளில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வ.உ.சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி பெற்றது. இரண்டாம் இடத்தினை காமராஜ் கலை அறிவியல் கல்லூரி பெற்றது.

# தமிழக அரசின் தொழில்நுட்ப போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் குழுவுக்கு ரூ 50 ஆயிரம் ரொக்க பரிசு!

நெல்லை மாவட்ட நிர்வாகம் சார்பில் மாணவ. மாணவிகளி டையே நடந்த புதிய தொழில் களை உருவாக்கும் தொழில் நுட்ப போட்டியில் வென்ற எப். எக்ஸ் பொறியியல் கல்லூரி மாணவர் குழுவுக்கு ரூ.50 ஆயிரம் ரொக்க பரிசை மாவட்ட கலெக்டர் விஷ்ணு வழங்கி பாராட்டினார்.

நெல்லை மாவட்ட அறிவியல் மையத்தில் மாணவ, மாண வியர். இளைஞர்கள் மத்தியில் புதிய தொழில்களை ஊக்கு விக்கும் வகையில் நான்கு வகையான தொழில்நுட்ப போட்டிகள் நடைபெற்றன. இந்த போட்டியில் 12 குழுக்கள் பங்கு பெற்றன. இதில் பங்கேற்ற பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர் சங்கர இசை செல்வம் (கம்ப்யூட்டர் சயின்ஸ்), விஜயதர்ஷினி, சண்முக லக்ஷ்மி, மாளவிகா, சாம் (சிவில்), அன்டோ ஜோயல், இஸ்மாயில் ஆகிய குழுவினர் வென்றனர்.

இதற்கான ரூ50 ஆயிரம் ரொக்கப் பரிசை நெல்லை மாவட்ட கலெக்டர் விஷ்ணு வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் விஷ்ணு பேசுகையில். 'ஸ்டார்ட் அப்' என்ற நிறுவனம் மூலம் புதிய தொழிலில் ஈடுபட விரும்பும் கல்லூரி மாணவ. மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து துறை மாணவ, மாணவிகளுக்கும் புதிய தொழில் தொடங்க தேவையான அனைத்து பயிற்சிகளும். தேவையான வழிகாட்டுதலும் கிடைக்கும் இவ்வாறு அவர் பேசினார்.




பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவர் குழுவுக்குரூ.50 ஆயிரம் ரொக்க பரிசை மாவட்ட கலெக்டர் விஷ்ணு வழங்கினார்.

# தேசிய அளவில் அறிவியல் 'Innovative'2022' கண்டுபிடிப்பு போட்டி!




**கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினார்.**

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி சார்பில் பாலிடெக்னிக் மாணவர்களுக்கான தேசிய அளவில் நடந்த புதிய அறிவியல் கண்டுபிடிப்பு போட்டியில் 50-க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளை மாணவர்கள் ஆர்வத்துடன் காட்சிப்படுத்தினர்.

திருநெல்வேலி வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்ப்பதற்கும், அதனை ஊக்குவிக்கும் வகையிலும், பாலிடெக்னிக் மாணவர்களுக்கான தேசிய அளவில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புக்கான போட்டி 'Innovative'2022' நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். அப்போது பேசிய அவர், 'சமுதாயத்திற்கு தேவையான புதிய கண்டுபிடிப்புகளை படைப்பதில் அதிக அளவில் மாணவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்

இதன் தொடர்ச்சியாக முனைவர். K.ஜெயக்குமார், (வளர்ச்சி) பொது மேலாளர் S.கிருஷ்ண குமார், (நிர்வாகம்) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்

இந்தப் போட்டியில் பல்வேறு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு 50 வகையான கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர். மாணவர்களின் அறிவியல் திறன் கண்டுபிடிப்புகள் வியப்பில் ஆழ்த்தின. அதனை கல்லூரி பேராசிரியர்கள் பார்வையிட்டு தேர்வு செய்தனர்.

இந்த அறிவியல் போட்டிக்கு உறுதுணையாக செயல்பட்ட அமைப்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்கள் உள்ளிட்டோரை ஸ்காட் குழும தலைவர் முனைவர் கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண் பாபு ஆகியோர் பாராட்டினர்.

இந்நிகழ்ச்சிகள் கல்லூரி வளாக மேலாளர் J.சகாரியா கேபிரியல் வழிகாட்டுதலின்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

## பாலிடெக்னிக் மாணவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகள்









# பன்னாட்டு நிறுவனங்களில்

## 274 மாணவர்களுக்கு மாத ஊதியத்துடன் வேலை

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கும் போதே மாணவர்களுக்கு மாத ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின்கீழ் 274 மாணவர்கள் மாத ஊதியத்துடன் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

இந்த வேலைவாய்ப்பு திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தி பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி நிர்வாகம் சாதனை படைத்துள்ளது.

நெல்லை வண்ணார் பேட்டையில் செயல்பட்டு வரும் கல்வி நிறுவனம் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இங்கு தரமான கல்வியுடன் கூடிய திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது

. இதனால் இறுதி ஆண்டு படிக்கும்போதே பன்னாட்டு நிறுவனங்களில் மாத ஊதியத்துடன் வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

முதல் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டு வரை படிக்கும் மாணவர்களுக்கு கல்லூரியிலே பன்னாட்டு வேலைவாய்ப்புகளுக்கான சிறப்பு வாய்ந்த பயிற்சிகள் நன்றாக அளிக்கப் படுகிறது

பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பிரான்சிஸ் சேவியர் கல்லூரி சிறப்பாக செயல்பட்டதற்காக அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் பிளாட்டினம் தரவரிசை' அங்கீகாரத்தை கல்லூரிக்கு வழங்கியுள்ளது.

இதன்மூலம் பன்னாட்டு நிறுவன உயர் அதிகாரிகள் கல்லூரி நிர்வாகத்திற்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். பயிற்சியும் அளித்து வருகிறார்கள். பொறியியல் கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் படித்து கொண்டிருக்கும் போதே பிரபல நிறுவனங்களான AMAZON, ZOHO, RAKUTEN, WIPRO, TCS, INFOSYS, CAPGEMINI, ZUcI SYSTEMS, MOBIUS, ELE GANT POWER, SYSTEMS, AVASOFT, CARBEN WINGZ, HEXAWARE, COLAKIN உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களில் நன்றாக சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு. அதில் 274 மாணவர்கள் இறுதி ஆண்டு படிக்கும் போதே மாத ஊதியத்துடன் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிட த்தக்கது.

அந்த மாணவர்களுக்கு பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் 64 கம்ப்யூட்டர்கள் வழங்கப்பட்டு அவர்கள் நன்கு பணியாற்றி வருகிறார்கள். அவ்வாறு பயிற்சி பெற்ற மாணவர்கள் மாத ஊதியம் ருபாய் 15 ஆயிரம் முதல் ருபாய் 60 ஆயிரம் வரை பெறுகின்றனர்.

இந்த ஆண்டில் மட்டும் கல்லூரியில் நடைபெற்ற முகாமில் 122 பன்னாட்டு நிறுவன ங்கள் கலந்து கொண்டன. சிவில். மெக்கானிக்கல். கம்ப்யூட்டர் சயின்ஸ், ஐடி. எலக்ட்ரிகல் மற்றும் பல்வேறு துறைகளான எலெக்ட்ரானிக்ஸ் ஆகிய துறைகளை சார்ந்த நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இதில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவ மாணவியரும் பங்கேற்று நன்கு பயன் அடைந்தனர். இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் தங்களது ஆண்டு வருமானத்தை கூட்டுவதற்காக. பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்த பிறகும், அந்நிறுவனங்களில் அவர்கள் நடத்தும் தகுதி தேர்விலும் மாணவர்கள் கலந்து கொண்டு, அதில் தேர்ச்சி பெற்று ஆண்டு வருமானத்தை அதிகரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இதற்காக இறுதி ஆண்டு மாணவர்களுக்கு கல்லூரியில் சிறப்பு ஆசிரியர்களை பயிற்சி அளிக்கப்படுகிறது. பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் அதிகாரிகளை கொண்டும் மாணவர்களுக்கு INTERNET OF THINGS, DATA SCIENCE, APP DEVELOPMENT, ROBOTICS, WEB DEVELOPMENT, ARTIFICIAL INTELLIGENCE போன்ற வற்றில் சிறந்து விளங்க தனி பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், மாணவர்களுக்கு APTITUDE, LIFE SKILLS, COMM UNICATION SKILLS ஆகிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பன்னாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்ற மாணவர்களுக்கு இறுதி ஆண்டில் முடிக்க வேண்டிய செயல்திட்டத்தையும் நிறுவனங்கள் செயல்படுத்தி வருகிறது.. இதன்மூலம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு பின் கிடைக்க வேண்டிய அனைத்து அனுபவங்களும் கிடைத்து வருகிறது.


இறுதி ஆண்டு படிக்கும் போதே மாணவர்கள் மாத ஊதியம் பெறுவதனால், மாணவர்கள் தங்கள் கல்லூரி படிப்புக்கான செலவினை தாங்களே பெற்றுக் கொள்கிறார்கள். இதனால் மாணவர்களின் பெற்றோர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்

வெளிநாடுகளில் உயர்படிப்பு படிக்கும் போதே வேலைவாய்ப்புடன் எப்படி படிப்போமோ, அதே வசதியுடன் கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கும் போதே மாத ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பு கிடைப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வேலைவாய்ப்பு திட்டம் வெற்றிகரமாக செயல்பட பெருமுயற்சி எடுத்து வரும் பொதுமேலாளர்கள், கல்லூரி முதல்வர், வேலைவாய்ப்பு பயிற்சி துறை இயக்குனர் கல்லூரி நிறுவனர் முனைவர் திரு. கிளிட்டஸ்பாபு, நிர்வாக இயக்குநர் அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்.

### கேரளா போட்டியில் ரூ.12 ஆயிரம் பரிசு!

கேரளாவில் நடைபெற்ற தேசிய அளவிலான செயல் முறை திட்ட போட்டியில் பிரான்சிஸ் பொறியியல் கல்லூரி மாண வர்கள் கலந்து கொண்டு .முதல் பரிசை வென்றனர் கேரளாவில் சிருஷ்டி என்ற தலைப்பிலான தேசிய செயல் திறன் போட்டிகள் நடைபெற்றன. இதில் எப்.எக்ஸ். கல்லூரி இரண்டாம் ஆண்டு மாணவர்கள் பிரவீன் சாம்சன், சரவண பெருமாள், கோபால கிருஷ்ணன், ஸ்ரீஜித், அஸ்வின் ஆகியோர் போட்டியில் முதல் பரிசாக ரூ.12 ஆயிரம் ரொக்கப் பரிசை வென்றனர்.



## நுண்கலைகள் கிளப் சார்பில் FROXEN கலைப் போட்டிகள்!

**நுண்கலைகள் கிளப் சார்பில்** 22 கலைப்போட்டிகள் நடைபெற்றன. இதில், கல்லூரியின் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறை மாணவர்கள் முதல் பரிசு வென்றனர்.

கல்லூரி மாணவ மாணவியரின் கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக பிரான்சிஸ் பொறியியல் கல்லூரி FROXEN என்ற தலைப்பில் 22 வகையான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன. நடன போட்டி, பாட்டுப்போட்டி, ரங்கோலி போட்டி, கழிவுப் பொருட்களில் இருந்து கலைப் பொருட்களை உருவாக்கும் போட்டி, இசைக்கருவி மீட்டல் போட்டி, மெகந்தி, மேலாட்டு, காய்கறியில் தயாரிக்கும் உணவு உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டியில் அனைத்து துறை மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

இந்த கலை போட்டிகளில் பிரான்சிஸ் பொறியியல் கல்லூரியின் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறை மாணவ, மாணவியர் முதல் பரிசை வென்றனர். 2வது பரிசை இன்பர்மேஷன் டெக்னாலஜி மாணவ, மாணவியர் பெற்றனர்.

## தேசிய 'Ideathon '22' போட்டியில் முதல் பரிசு!



குஜராத் தொழில்துறை அமைச்சர் திரு.ஜகதீஷ்பாய் I.விஸ்வகர்மா மற்றும் குஜராத் தொழில்நுட்ப பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் நவீன் ஷெத் ஆகியோர் மாணவர் குழுவுடன் உரையாடிய போது எடுத்த படம்.

குஜராத் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நடந்த தேசிய அளவிலான போட்டியில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் குழு சமர்ப்பித்த திறமையான படைப்பு மற்றும் யோசனையை (idea) குஜராத் தொழில்துறை அமைச்சர் திரு.ஜகதீஷ்பாய் ஐ.விஸ்வகர்மா பாராட்டினார்.

குஜராத் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் ஜி.டி யு. இன்னோவேஷன் அண்ட் ஸ்டார்ட்டு அப் (GTU Innovation and Startup) நிறுவனத்தால் நடத்தப்பட்ட தேசிய புதுமையான படைப்பு மற்றும் ஐடியாத்தான்-22 (National Innovative Pitch Fest-IIdeathon '22) டேட்டா சயின்ஸ் ஆன்லைன் போட்டிகள் நடைபெற்றன.

இதில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி டேட்டா சயின்ஸ் ஆய்வகப் பிரிவை சேர்ந்த கிளாட்ஸ்டன் ஆகாஷ் ராஜா (I-AI&DS), காயத்திரி (I-AI&DS) மற்றும் தர்ஷினி (II-CSE) ஆகியோர் இடம் பெற்ற மாணவர்கள் குழுவினர் இயந்திர கற்றல் அடிப்படையிலான பயிர் பாதுகாப்பு அமைப்பு" என்ற புதுமையான யோசனையை (New Idea) உருவாக்கினர். முதல் இரண்டு சுற்று போட்டிகள் ஆன்லைனிலேயே நடத்தப்பட்டன.

இதனையடுத்து பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் குழுவின் படைப்பு இறுதிப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டது.

இதுகுறித்த விளக்கக்காட்சியும் குஜராத் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக கலந்து கொண்ட குஜராத் தொழில்துறை அமைச்சர் திரு.ஜகதீஷ்பாய் I.விஸ்வகர்மா மற்றும் குஜராத் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் நவீன் ஷெத் ஆகியோர் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவர் குழுவுடன் உரையாடினர்.

அவர்களிடம் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் தங்களது படைப்பின் யோசனையை (IDEA) திறம்பட விளக்கினர்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களை குஜராத் தொழில்துறை அமைச்சர் வெகுவாக பாராட்டினார். இறுதி போட்டிக்கு தேர்வானதன் மூலம் தேசிய அளவிலான போட்டியில் முதல் பரிசை வென்றனர் .

இந்தப் போட்டியில் பங்கேற்க ஊக்கமும். உற்சாகமும் அளித்த கல்லூரி பொதுமேலாளர்கள் முனைவர் கே.ஜெயக்குமார். S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன் மற்றும் துறை பேராசிரியர் முனைவர் அனிதா (I-AI&DS) ஆகியோரை கல்லூரி நிறுவனர் முனைவர் கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குனர் அருண் பாபு பாராட்டினார்.

## தொழிற்சாலையை பார்வையிடுதல்!



பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி எம்.சி.ஏ முதலாம் ஆண்டு மாணவர்களை நாகர்கோவில் பார்வதிபுரத்தில் உள்ள A.K. இன்போடெக் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு அழைத்து சென்று (iNDUSTRY VISIT) காண்பிக்கப்பட்டது.

அந்நிறுவனத்தில் மார்க்கெட்டிங், மென்பொருள் தேவை, பகுப்பாய்வு, சோதனை மற்றும் தயாரிப்பு மேம்பாடு. குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. தொழில் வாய்ப்புகள் டெவலப்பர், (Developer) ஆண்ட்ராய்டு டெவலப்பர், (Android Developer) IOS டெவலப்பர் மற்றும் சர்வர் (Server) நிர்வகிப்பது, மற்றும் நிறுவனத்தின் தேவைகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

ஜாவா ஸ்கிரிப்ட், (JAVASCRIPT) பைதான், (PYTHON) ஜேஎஸ்பி (JSP,), ஏஎஸ்பி ரியாக்ட் ஜே.எஸ் (ASP React JS). குறித்தும் நிறுவனத்தின் பயிற்சியாளர் விளக்கினார். மேலும், நிறுவனத்தின் குழுவினரின் திறமையான செயல்பாடுகளின் முக்கியத்துவமே வெற்றியின் ரகசியம் என்று பயிற்சியாளர் விளக்கினார்.

## ஐ.ஓ.டி (IOT) ஆய்வக துறை - எலக்ட்ரானிக் துறை மாணவர்களுக்கு ட்ரோன் செயல்முறை பயிற்சி!



பொறியியல் மாணவர்களுக்கு ட்ரோன் செயல்முறை விளக்க பயிற்சி அளிக்கப்படும் காட்சி

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் EMBEDDED IOT மற்றும் எலக்ட்ரானிக் துறையும் இணைந்து ட்ரோன் தொழில்நுட்ப (ஆளில்லா விமானம்) பயிற்சி பட்டறை 2 நாள்கள் நடைபெற்றது.

உள்ளூர் போலீஸ் முதல் எல்லையில் காவல் காக்கும் இந்திய ராணுவம் வரை ட்ரோன் கேமராக்களை பயன்படுத்தி வருகின்றன. பல வகைகளில் கிடைக்கும் ட்ரோன், பறக்கும் நேரம், பறக்கும் தூரம், கேமராவின் தரம் ஆகியவற்றை பொறுத்து மாறுபடுகிறது.

ட்ரோன் கேமரா என்பது மிகப் பெரிய கண்டுபிடிப்பாகவே பார்க்கப்படுகிறது. தரையில் இருந்து மேலே பறந்து வானத்தில் இருந்தபடியே மிகவும் துல்லியமாக நிகழ்வுகளை புகைப்படங்களை எடுக்கும் பணியை ட்ரோன் செவ்வனே செய்து வருகிறது.

குறிப்பாக பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் ட்ரோன், அதிக நேரம், நீண்ட தூரம் பறக்கக் கூடியதாக உள்ளது. ஆட்கள் நுழைய முடியாத மலைப் பகுதிகள், காட்டுப் பகுதிகள் என இக்கட்டான நிலப்பரப்பில் எல்லாம் ட்ரோன் பறந்தவாறே கண்காணிப்பதில் மூன்றாம் கண்ணாக இருக்கிறது. இது குறித்து எப்.எக்ஸ். பொறியியல் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக கல்லூரி நிர்வாகம் கோவையைச் சேர்ந்த கிரீன் டெக் ஏவியேஷன்ஸ் நிறுவன பொறியாளரும், பயிற்சியாளருமான கார்த்திக் ட்ரோன் செயல்பாடு மற்றும் பயன்களை மாணவர்களுக்கு விளக்கினார். ட்ரோன் கருவியை ஒருங்கிணைப்பது குறித்த பயிற்சியை மாணவ, மாணவியருக்கு அளித்தார்.

இதில் 40 மாணவர்கள் கலந்து கொண்டனர். ட்ரோன் கருவியான குவாட்காப்டரில் பொருத்தக்கூடிய மோட்டார், அதில் பறக்கும் கட்டுப்பாடுகள், ப்ரொபெல்லர், சென்சார், அக்ஸ்ப்லெரோமீட்டர்,





மாணவர்களுக்கு ட்ரோன் இயக்கும் பயிற்சி

ட்ரான்ஸ்மீட்டர், ரிசீவர் ஆகியவை குறித்து மாணவர்களுக்கு செயல் முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், ட்ரோன்-ஐ அசெம்பில் செய்து காட்டினார். ட்ரோன்-ஐ இயக்கி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த ட்ரோன் பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் முனைவர் K.லக்ஷ்மி நாராயணன், எலக்ட்ரானிக் துறை தலைவர் பேராசிரியர் J.பெரிஸ்கா ஆகியோர் செய்திருந்தனர்.

இதற்காக ஊக்கம் அளித்த பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் ஆகியோரை கல்லூரி நிறுவனர் முனைவர் கிளிட்டஸ் பாபு. அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்.

## ராஜஸ்தானில் தேசிய போட்டி: ரொக்க பரிசு!

ராஜஸ்தான் மாநிலம் பிலானியில் உள்ள பிர்லா டெக்னிக்கல் பயிற்சி நிறுவனத்தில் நடந்த Apogee '22 என்ற தேசிய அளவிலான முன்மாதிரி போட்டியில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி டேட்டா சயின்ஸ் லேப் மாணவர்கள் கிளாட்ஸன் ஆகாஷ் ராஜா, (IAI&DS) மாரிச்செல்வம், (IAI &DS) ஜெபின், (IAI&DS) கலாதேவி, (IIIT), தர்ஷிணி (II-CSE) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் மாணவர் குழுவினர் முதல் ரொக்கப் பரிசை பெற்றனர். பேராசிரியர் முனைவர் A.அனிதா (AI&DS) வழிகாட்டுதலின்படி பங்கேற்றனர்.

